# தொன்மைமிகு தமிழ்மொழி

*கோ. பிரியங்கா*
பதிவு எண் 12235, முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, இராணி அண்ணா மகளிர் கல்லூரி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2022**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5019

## முன்னுரை

"ஓங்கலிடை வந்துயர்ந்தோர் தொழவிளங்கி ஏங்கொலி நீர் ஞாலத்து இருள்கடியும் - ஆங்கவற்றுள் மின்னேர் தனியாழி வெங்கதிரோன் ஏனையது தன்னேரிலாத தமிழ்" என்று தண்டியலங்கார உரை மேற்கோள் கூறுகிறது. தன்னிகரில்லாத தமிழ் மொழியின் தொன்மையையும் சிறப்பையும் ஆய்வதே இக்கட்டுரையின் சிறப்பாகும். தமிழ் மொழியின் சிறப்பைப் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் ஐயனாரிதனார். "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்த குடி" என்று பாடியுள்ளார். இது வெறும் உயர்வு நவிற்சி அல்ல. கற்கருவி தோன்றுவதற்கு முன்னரே மண்பாண்டம் தோன்றுவதற்கு முன்னரே தோன்றிய குடி தமிழ்க்குடி ஆகும். அத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழமொழியின் தொன்மைக் குறித்து இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

## மூத்த மொழியாம் தமிழ்மொழி

உலகில் முதன் முதல் மக்களினம் தோன்றியது தென்னிந்தியாவில் தான் என்று சில புவியியல் மானிடவியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். தென்னிந்தியாவிற்குத் தெற்கில் அமைந்திருந்த லெமூரியாவில் தான் முதன்முதல் மக்களினம் தோன்றிற்று எனவும், அவ்வினமே தமிழ்நாட்டின் ஆதிகுடிகள் எனவும் லெமூரியக் கண்டத்தில் வாழ்ந்து வந்த மக்களினம் வழிவந்தவர்கள் இப்போது தென்னிந்தியாவிலும், இலங்கையிலும், கிழக்கிந்தியத் தீவுகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள் என ஆராய்ச்சி அறிஞர்கள் கூறிவருகின்றனர். ஏனெனில் இந்த இடங்களில் வாழும் மக்களின் உடற்கூறு ஒற்றுமை, மொழிஅமைப்பு ஆகியவற்றில் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இந்த லெமூரியக் கண்டம் கடல்கோளால் மூழ்கிச் சிதறுண்டது என்பதும் லெமூரியாக் கொள்கையினரின் கருத்தாகும்.

### தமிழ் - திராவிடமே

ஆரிய மக்கள் "தமிழ்" என்னும் சொல்லை உச்சரிக்க முடியாது. அவர்கள் நாவில் தமிழ் என்னும் சொல் தமிள்-திரமில்-திரவிடம்-திராவிடா என்றே திரிந்து வந்துள்ளது. கி.பி 8 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் குமரிலபட்டர் என்னும் வடமொழி ஆசிரியர் இவர் தமிழ் மொழியையும் அதன் இனமொழிகளையும் குறிப்பதற்கு "ஆந்திர-திராவிட பாஷா" என்னும் வடமொழிச் சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளார். குமரிலபட்டரின் காலத்திற்கு முன்பேத் "திராவிடா" என்னும் சொல் ஆரியரல்லாத இந்தியரைக் குறித்துள்ளது. எனவே ஆரியர்கள் கைபர்க் கணவாய் வழியாக இந்தியாவிற்கு வந்தபோது இந்தியா முழுவதும் பரவி இருந்த மக்கள் திராவிடர்கள் என்றும் அவர்கள் பேசிய மொழியைத் திராவிட மொழி என்றும் அழைத்துள்ளனர். திராவிட மொழி என்பது தமிழ்மொழியையே குறித்துள்ளது என்பது இதன்வழி அறியப்படுகிறது.

ஒருமொழியின் வயதைக் கணக்கிட வேண்டுமெனில் அம்மொழியின் வரலாற்றையும் வளத்தையும் வாழ்வையும் வரையறுக்க வேண்டும். ஆனால் இந்திய வரலாற்றை ஆய்ந்தோர்கள் தமிழுக்குத் தகுந்த இடம் தரவில்லை. வட இந்திய வரலாற்று நூல்கள் தோன்றிய அளவுக்கு தென்னிந்திய வரலாறு உருவாகவில்லை. கங்கையைப் பற்றி எழுதிய அளவுக்கு காவேரி, கிருஷ்ணா, வைகை போன்றவற்றை ஆராயவில்லை என்றே அறிஞர்கள் கூறுகின்றனர். இருப்பினும் கிடைக்கின்றத் தகவல்களை வைத்து ஆராயப்பெற்றுத் தமிழின் பழமையைக் கண்டறிந்துள்ளோம்.

### ஆதிச்சநல்லூரும் சிந்துச்சமவெளியும்

தமிழர்களின் தொன்மையான நாகரிகத்துக்குச் சான்றாக உள்ளது ஆதிச்சநல்லூர். திருநெல்வேலியில் இருந்து ஸ்ரீவைகுண்டம் செல்லும் வழியில் 24கி.மீ தூரத்தில் பொன்னன்குறிச்சி பேருந்து நிறுத்தம் அருகே உள்ளது ஆதிச்சநல்லூர். தாமிரபரணி ஆற்றின் தென் கரையில் உள்ள சிறிய கிராமம் இது. இங்கே 144 ஏக்கர் பரப்பளவு கொண்ட மிகப் பெரிய இடுகாடு உள்ளது.சீனிக்கல் நிரம்பிய நிலப்பரப்பான இந்த இடுகாடு 10,000 ஆண்டுகளுக்கு முந்தியது. அந்தக் காலங்களில் இறந்தவர்களைப் பானையில் வைத்துப் புதைப்பார்கள். அந்தப் பானையை ஈமத்தாழி என்று சொல்லுவார்கள்.

மூன்று அடுக்குகளாகப் புதைக்கப்பட்ட ஈமத்தாழிகள் ஆதிச்சநல்லூரில் ஏராளமாகக் கிடைக்கின்றன. ஈமச்சடங்குக் கல்நடும் பழக்கம் தமிழகத்தில் இருக்கிறது. ஆனால் கல் நடும் பழக்கம் உருவாவதற்கு முந்தைய காலகட்டத்தைச் சேர்ந்தது ஆதிச்சநல்லூர். இங்குக் கிடைத்துள்ள முதுமக்கள் தாழிகள் சிவப்பு வண்ணத்தில் கூம்பு வடிவமாக மூன்றடி விட்டம் கொண்டவை. தாழிகளின் ஓரங்களில் கைவிரல் பதிந்த வேலைப்பாடுகளும் முக்கோண வடிவத்தில் புள்ளிகளும் காணப்படுகின்றன. இந்த இடத்தை முதன்முதலில் ஆராய்ந்தவர் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த அகழ்வாராய்ச்சியாளர் டாக்டர் ஜாகர். 1876ம் ஆண்டு திருநெல்வேலிப் பகுதியில் மானுடவியல் ஆய்வுக்காக வந்த ஜாகர் தற்செயலாகக் கண்டுபிடித்தது தான் இந்தத் தொல் தமிழர்களின் நாகரிகச் சின்னம் இங்குக் கிடைத்துள்ள பானைகளின் வெளிப்புறத்தில் பெண் உருவம் விலங்குகள் பறவை தாவரங்கள் புடைப்புச் சிற்பமாக காணப்படுகின்றன.

இந்த ஓவியங்களும் சிந்துவெளி யில் கிடைத்துள்ள ஓவிய உருவங்களும் ஒத்துக் காணப்படுகின்றன. இரண்டையும் ஆய்ந்தவர்கள் சிந்துசமவெளி நாகரிகத்திற்கு முற்பட்டதாகத் தமிழர் நாகரிகம் இருக்கலாம். ஆதிச்ச நல்லூரின் தொன்மை நாகரிகம் சிந்து சமவெளியோடு ஒப்பிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இங்குக் கிடைத்துள்ள கலயங்களில்

எழுத்துருக்கள் பொறிக்கப்பட்டு இருப்பது கல்வியில் தமிழ் மக்கள் மேம்பாடு அடைந்த நிலையையே காட்டுகிறது. தமிழ் அறிஞர் தொ.பரமசிவன் அவர்கள் இப்பகுதியில் இரும்பு உருக்கும் அடுப்புகள் இருப்பதையும் கண்டறிந்துள்ளார்.

சிந்துவெளிப் பள்ளத்தாக்கில் தோண்டியெடுக்கப்பட்ட புதை பொருட்கள் பலவற்றில் பாண்டியர்க்குரிய மீன் சின்னங்கள் காணப்படுகின்றன. இங்குக் காணப்படும் பல சாசனங்களும் தமிழ்மொழிச் சார்புடையவையே. இவற்றையெல்லாம் வைத்தே செந்தமிழ் நாட்டிலிலுந்து சிந்துச் சமவெளியில் சென்று குடியேறிய தமிழர்கள் உலகம் வியக்கும் நாகரிகத்தை அப்பகுதியில் நிலைநிறுத்தினர். அவர்களே உலகின் மற்றப் பகுதிகளுக்கும் பரவி ஆங்காங்குப் பல நாகரிகமே என்பது உறுதியாகிறது.

இக்கருத்தினை ஏற்காத ஒருசிலர் மனித நாகரிகத் தொடக்கம் சுமேரியாவில் ஏற்பட்டது என்றும் வேறு சிலர் எகிப்தில் ஏற்பட்டது என்றும் கூறுகின்றனர். ஆனால் சர் ஜான் மார்சுசல் ஹீராஸ் அடிகளார் போன்றவர்கள் சிந்துச் சமவெளி நாகரிகத்தைச் சிறந்த முறையில் ஆராய்ந்து கண்ட உண்மைகளை வெளியிட்டுள்ளார்கள். மொகன்சதாரோ ஹரப்பா போன்ற பழைய இடங்களிலிருந்து தோண்டி எடுக்கப்படும் புதைபொருட்களில் காணப்படும் எழுத்துக்களும் சொற்களும் பெரிதும் தமிழ் மொழியைச் சார்ந்தவை என்றும் சுமேரியாப் பகுதிகளில் காணக்கூடிய எழுத்துக்களை விடத் தொன்மையானவை என்றும் ஹீராஸ் அடிகளார் கூறுகின்றார். உலகத்திலேயே தமிழர் பேசிய மொழியே தொன்மையானது என இதன் வழி அறியப்படுகிறது.

நாகை மாவட்டத்திலுள்ள செம்பியன் கண்டியுரில் ஆசிரியர் ஒருவரின் வீட்டுத் தோட்டத்தில் கிணறு தோண்டுகிற போது புதிய கற்காலத்துக் கைக்கோடாரிகள் இரண்டு கிடைத்தன. அவற்றில் ஒரு கோடாரி மீது எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தன. அவை தொல்லியல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட போது அக்கோடாரி ஒன்றில் பொறிக்கப்பெற்ற எழுத்துச் சிந்துவெளி எழுத்து எனவும் அந்த எழுத்தில் உள்ளதை முருகன் எனவும் தமிழகத்தின் தொல்லியல் அதிகாரி ஐராவதம் மகாதேவன் படித்துக் காட்டினார். சிந்துவெளி எழுத்துகள் தமிழகத்தில் பல இடங்களில் கண்டறியப்பட்டு வருகின்றன. அக்கோடாரியில் வரையப்பட்ட காலம் கி.மு 2000 க்கும் கி.மு 1000க்கும் இடைப்பட்டது என்றும் கூறப்படுகிறது. இச்சான்றினை வைத்துச் சிந்துவெளி நாகரிகமும் தமிழர் நாகரிகமும் ஒத்திருப்பதை உணர முடிகிறது.

**ஆரியர் வருகை**

தமிழும் சமஷ்கிருதமும் சகோதர மொழிகளென்றும் அவற்றைச் சிவபெருமான் முறையே அகத்தியருக்கும் பாணினிக்கும் அருளிச் செய்தார் என்று காஞ்சி புராணம் திருவிளையாடல் புராணம் முதலிய நூல்கள் கூறி வந்தாலும் அவற்றை ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனெனில், ஆரியரின் ஆதியிடங்கள் மத்திய ஆசியா, லிதுவேனியா, ஸ்காந்திநேவியா, காக்கேசிய போன்ற பகுதிகளாகும். இவ்விடங்களில் வாழ்ந்த ஆரியர்களில் ஒரு கூட்டத்தினர் வடமேற்குக் கணவாய்கள் வழியாக வந்து பஞ்சாப்பை அடைந்தனர். கி.மு 2000க்கும், கி.மு1400க்கும் இடையில் தான் இவர்கள் இந்தியாவை வந்தடைந்தார்கள் என்று “இந்தியாவின் பண்டைய நாகரிகம்” என்னும் நூலில் ஆர்.சி.தத்தர் கூறுகின்றார்.

ஆரியர்கள் இந்தியாவை அடைந்தபோது இந்தியா எங்கும் பரவி வாழ்ந்தோர் திராவிட மக்களேயாவார் என்று பல்லோர் கூற்றுக்களை ஆய்ந்து ந.சி.கந்தையா அவர்கள் “தமிழகம்” என்னும் நூலில் தருகின்றார். அவ்வாறு வந்த ஆரியர்கள் திராவிடர்களுடன் இணைந்தும் வேறுபட்டும் வாழ முற்பட்டனர். பாகிஸ்தானில் கொற்கை, வஞ்சி, தொண்டி, மாத்ரை, உறை, கூடல்கட் மற்றும் கோளி

என்ற தமிழ்ப் பெயர்களில் ஊர்கள் இருக்கின்றன. அதுபோலவே ஆப்கானிஸ்தானிலும் கொற்கை மற்றும் பும்புகார் என்ற பெயரில் ஊர்கள் இருக்கின்றன என்று ஐ.ஏ.எஸ் அதிகாரி ஆர். பாலகிருஷ்ணன் கூறுவதும் சிந்திக்கக் கூடியதே. இவற்றை நோக்கும் போது தமிழ் எவ்வளவு தொன்மையுடையது என்பதை அறிய முடிகிறது.

### தாய்மொழி தமிழ்

தாய்மொழியாம் தமிழ்மொழியிலிருந்து பல சேய் மொழிகள் தோன்றிவிட்டன. அச்சேய் மொழிகளைப் பேசிய மக்களும் அம்மொழிகள் வழங்கிய இடங்களும் தமிழகத்தினின்று பிரிந்திருப்பதையும் அறிகின்றோம். மனோன்மணிய ஆசிரியர் சுந்தரனார்,

**"கன்னடமும் களி தெலுங்கும்**
**கவின்மலையாளமும் துளுவும்**
**உன்னுதரத்து உதித்தெழுந்தே**
**ஒன்றுபல ஆயிடினும்"**

என்று பாயிரத்தில் கூறுகின்றார். கன்னடமொழியும் தெலுங்குமொழியும் மலையாள மொழியும் துளுவ மொழியும் இன்று தனித்தனி மாநில மொழிகளாக விளங்குகின்றன. அந்த மாநிலங்களும் தமிழகத்தினின்று பிரிக்கப்பட்டுத் தனி மாநிலங்களாகத் திகழ்கின்றன. இந்த உண்மைகள் வழி தமிழ் மொழியானது மிகப் பழமையானது எனவும் உலக நாகரிகங்களுக்கெல்லாம் முன்னோடியானது என்பதும் தெளிவாகிறது.

### தமிழகத்தின் எல்லை

தமிழகத்தின் எல்லையை வைத்தும் தமிழ் மொழியின் பழமையைக் கணக்கிடலாம். தொல்காப்பியத்தில் பாயிரம் எழுதும் குறிப்பு இல்லை. ஆனால் தொல்காப்பியத்தில் சிறப்புப் பாயிரம் அமையப் பெற்றுள்ளது. இப்பாயிரத்தைப் பாடியவர் பனம்பாரனார் பொதுப்பாயிரம் ஆத்திரையன் என்பவரால் எழுதப்பெற்று என்றும் அது நிலைத்து நிற்கவில்லை என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தொல்காப்பித்திற்கு உரை எழுதியவர்களான இளம்புரனார் (கி.பி 11 ஆம் நூற்றாண்டு) நச்சினார்க்கினியரோ (கி.பி 14ஆம் நூற்றாண்டு) பொதுப்பாயிரத்தைக் காட்டவில்லை. இவர்கள் சிறப்புப் பாயிரத்திற்கு மட்டுமே உரை கண்டுள்ளார்கள். தமிழகத்'தின் எல்லையாக,

**"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்**
**தமிழ்கூறும் நல் உலகத்து"**

என்று வரையறை செய்யப்பெற்றுள்ளது. ஆனால் சங்க இலக்கிய நூலான புறநானூற்றில் (புறம்.6.1-4)

**"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்**
**தெனாஅது துருகெரு குமரியின் தெற்கும்**
**குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்**
**குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்"**

என்று தமிழகத்தின் எல்லையாக வடக்கே பனிமலையாகிய இமயமலையும் தெற்கே குமரிக்கோடும் மேற்கும் கிழக்குமாக கடல்களும் எல்லைகளாகக் கூறப்பட்டுள்ளது. ஆகவே பனம்பாரனார் கூறும் தமிழக எல்லை பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதாகக் கருத இடமளிக்கிறது. தமிழ் மொழியே இந்தியா முழுமைக்கும் மூலமொழியாக வழங்கி வந்துள்ளது.

முதன்முதல் மனித இனம் தோன்றிய இடம் இலெமூரியா கண்டம் தமிழகம் இன்றுபோல் இல்லாது குமரிமுனைக்குத் தெற்கே இன்னும் விரிந்து குமரிமலை பஃறுளி ஆறு முதலியவற்றை உள்ளடக்கி இருந்தது இச்செய்தியைப் பின்வரும் சிலப்பதிகாரக் காடுகாண் காதை பாடல் வரிகள் உணர்த்துகிறது.

**"பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்**
**குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள**
**வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு**
**தென்திசை யாண்ட தென்னன் வாழி"**

### முச்சங்கங்கள்

கி.மு 5000 இலிருந்து கி.பி 300 வரைக்கும் தலை, இடை, கடைச்சங்கங்கள் முறையே தென்மதுரையிலும், கபாடபுரத்திலும்,

கூடல்மாநகரிலும் நிறுவிப் புலவர்களைக் கொண்டு பாண்டியர்கள் தமிழை ஆய்ந்து வந்துள்ளார்கள். இலக்கிய இலக்கணங்களை வளப்படுத்தி வெளிக்கொணர்ந்தார்கள். அக்காலச்சங்கங்கள் இக்காலப் பல்கலைக்கழகங்கள் போல் விளங்கியுள்ளன. ஒரு மொழி பண்பட்ட நிலையை அடைந்த பிறகுதான் அதில் ஆராய்ச்சி நடத்துவது இயலும். அவ்வகையில் தமிழ்மொழி கி.மு5000க்கும் முன்பே பண்பட்ட மொழியாக விளங்கியுள்ளது. தலைச்சங்கம் இருந்தது என்பதற்கு செங்கோன் தரைச்செலவு என்ற நூல் தவிர பிறவெல்லாம் கடற்பெரு வெள்ளத்தால் அழிந்தன.

## முடிவுரை

தொல்காப்பியம், இறையனார் அகப்பொருளுரை, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலம்பு, மணிமேகலைபோன்றனஇடைகடைச்சங்க காலத்து நூல்களாகும். சங்கம் இருந்தது பற்றி இறையனார் அகப்பொருளுரை, சிலப்பதிகாரவுரை, கம்பராமாயணம், பெரியபுராணம் முதலிய நூல்களில் சான்றும் உள்ளன. தலைச் சங்கப்புலவனார் தம்முள்" என்ற பெரிய புராண வாக்கும் "அகன்பொதியில் திருமுனிவன் தமிழ்ச்சங்கம்" என்ற கம்பராமாயண வாக்கும் உள்ளது. "கூடலினாய்ந்த ஒண்டீந்தமிழ்" என்ற மாணிக்கவாசகத் திருவாக்கினாலும் சங்கம் இருந்தது என்றும் அங்கு தமிழ் மொழி ஆராயப்பட்டது என்றும் இக்கூற்றுக்களை வைத்துக் கணிக்க முடிகிறது.

## துணைநின்ற நூல்கள்

1. கா.சுப்பிரமணிய பிள்ளை இலக்கிய வரலாறு
2. தெ.பொ.மீ உலக நாகரிகத்தில் தமிழரின் பங்கு
3. ந.சி.கந்தையா தமிழகம்
4. குணா தொல்காப்பியத்தின் காலம்